

ஜுபிலி
பிலிம்ஸ்

அன்பு எங்கே?

டைரக்ஷன்
யோகானந்த்

BAKTHA

ஜுபிலி பிலிம்ஸ்

அன்பு எங்கே?

நடிகர்கள்

இலட்சிய நடிகர், எஸ். எஸ். ராஜேந்திரன் ... சோமு
பாலாஜி ... ராமு
எஸ். வி. ரங்காராவ் ... மாசிலாமணி
டி. ஆர். ராமச்சந்திரன் ... அப்பாவு
எம். கிருஷ்ணமூர்த்தி ... அபபாவு தந்தை
வி. எஸ். ராகவன் ... செக்ரட்டரி
எஸ். ஏ. கண்ணன் ... கோபால்
கணபதிபட் ... குருஜி
கே. ஜி. அர்ச்சுனன் ... சிஷ்யன்
எஸ். என். கிருஷ்ணன் ... அஸிஸ்டெண்ட் குருஜி
ஜெய சக்திவேல், நடராஜன் ... சமையற்காரர்கள்
அசோகன், B. A., (கௌரவ நடிகர்)

நடிகைகள்

பண்டரிபாய் ... அமுதா
மைனாவதி ... காமு
சூர்யகலா ... மாலா
தேவிகா ... பார்வதி
லட்சுமி பிரபா ... அலமேலு
ராதாபாய் ... சிவகாமி
மனோரமா ... நாடகப் பெண்
ரீட்டா, அம்பிகா ... தாசிகள்
ராஜேஸ்வரி ... சமையற்காரி

★

வசனம் — முரசொலி மாறன் M. A.
இசை — வேதா
ஒளிப்பதிவு டைரக்டர் — பி. எஸ். செல்வராஜ்
திரைக்கதை, அசோஸியேட் டைரக்ஷன் — ராஜேந்திரா
தயாரிப்பு — வி. கோவிந்தராஜன்
டைரக்ஷன் — யோகானந்த்

ஜுபிலி பிலிம்ஸ்

அன்பு எங்கே?

பாடல்கள்	... தஞ்சை இராமையாதாஸ்
	... கவிஞர் கண்ணதாசன்
	... பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்
	... விந்தன்
	... சீதாராமன்
பின்னணி பாடியவர்கள்	... சுசீலா
	... லீலா
	... ஜமுனா ராணி
	... (ராதா) ஜெயலட்சுமி
	... பால சரஸ்வதி
	... டி. எம். சௌந்திரராஜன்
	... ஏ. எம். ராஜா
நடன அமைப்பு	... சின்னி
	... சம்பத்
	... சோப்ரா
	... டெஸ்மண்ட்
பாடல்கள் ஒலிப்பதிவு	... இ. ஐ. ஜீவா
	... டி. எஸ். ரெங்கசாமி
	... ஆர். ராஜகோபால்
வசனம் ஒலிப்பதிவு	... எம். எஸ். நாகேஸ்வரன்
ஒளிப்பதிவு	... பி. ஆர். சேகர்
	... பாச்சு
(காமிரா) ஆபரேடிவ்	... கே. கே. மேனன்
	... பி. எல். நாகப்பன்
படத்தொகுப்பு	... ஆர். ராஜன்
ஒப்பனை, சிகை அலங்காரம்	... என். பி. சிவராமன்
ஆடை அலங்காரம்	... சி. கே. கண்ணன்
கலை	... கோட்காங்கர்
அரங்க நிர்மாணம்	... பி. தியாகராஜன்
மோல்டிங்	... பி. கே. சுப்பராயலு
ஓவியக் காட்சிகள்	... ஆர். முத்து
வர்ண வேலைகள்	... எம். நடராஜன்
	... ஆர். பார்த்தசாரதி நாயுடு
அரங்க அலங்காரம்	... எஸ். செல்லப்பா
மின்சார அமைப்பு	... பி. தாமோதரன்
	... ஜி. வரதன்

அன்பு எங்கே?

ப்ராஸஸிங்	... சர்தூல் சிங் சேத்தி ... [ஏ. வி. எம். லாபரட்டரி]
அசோஸியேட்	... பி. வி. நாயகம்
ஸ்டில்ஸ்	... ஆர். என். நாகராஜராவ்
விளம்பர டிசைன்கள்	... பக்தா, கே. நாகேஸ்வரராவ், ... டி. வி. எஸ்—சர்மா.
விளம்பர நிர்வாகம்	... பின்னலூர்—சிவானந்தன்
சென்சார் ஸ்கிரிப்ட் டைப் செய்தது	... எம். ஆர். எஸ். மணி
ஆடைகள்	... இந்தியா சில்க் ஹவுஸ்
சூட் தயாரிப்பு	... குபேர்ஸ்
அரங்க அலங்காரப் பொருள்கள்	... சினி கிராப்ட்ஸ் ... கிரி மியூசியம்
ஒலிப்பதிவுக் கருவி	... **R. C. A. Sound System**
ஸ்டுடியோ	... கோல்டன்
தயாரிப்பு நிர்வாகம்	... வி. ஆர். சந்துரு
பொது நிர்வாகம்	... என். கிருஷ்ணமூர்த்தி

உதவியாளர்கள்

டைரக்ஷன்	... ஆர். ராஜன் ... பின்னலூர்—சிவானந்தன்
இசை	... லூயிஸ்
ஒப்பனை	... சி. எம். முத்து, எஸ். செல்லப்பா ... பாப்ஜி, சேகர்
ஆடை அலங்காரம்	... டி. ராஜு ... டி. நடராஜன்
வசனம் ஒலிப்பதிவு	... லாசரஸ் ... மணவாளன் ... சங்கர்
(காமிரா) ஆபரேடிவ்	... வடிவேலு ... சுந்தர் ... ரங்கநாதன்
படத்தொகுப்பு	... ஆர். தாஸ்
ப்ராஸஸிங்	... டி. ராமசாமி ... மனோஹர் சிங் ராவுத் ... பி. சோமு, கே. பஞ்சு
தயாரிப்பு நிர்வாகம்	... டி. எஸ். பாலு, கன்னியப்பன்

அன்பு எங்கே?

கதைச் சுருக்கம்

பெங்களூரில் பங்கு மார்க்கெட் வியாபாரத்தில் பிரபல மானவர் மாசிலாமணி முதலியார். அவரது குமாரர்களான ராமுவும் சோமுவும், அவ் வியாபாரத்தைப் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். வயதானதால் ஓய்வெடுத்துக்கொண்ட மாசிலாமணி, தனது பொழுதையும் பொருளையும் சீட்டாட்டத்தில் செலவழித்து வருகிறார். மூத்த குமாரன் ராமு, அமுதா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறான் என்றாலும் அவர்களது முதல் சந்திப்பிலே ஏற்பட்ட சிறு பூசலின் காரண மாக வெறுப்புற்று அவளைப் பிறந்தகத்திற்கு அனுப்பி விட்டு, நாட்டியமாடிப் பொழுது போக்கும் மாலா என்பவளுடன் சுற்றித் திரிகிறான்.

இளைய குமாரன் சோமு, அலுவலக நேரம் போக மற்ற நேரத்தில் விலைமாதர்கள் வீட்டிலே ஆடிப்பாடிக் கூத்தடிப் பதுடன், குடிப்பழக்கத்தையும் விடாப்பிடியாகக் கொண்டிருக் கிறான்.

ராமு, சோமு இவர்களின் தங்கையான காமு, தன் கணவன் அப்பாவு நாகரிகமில்லாதவன், பிளேடு வியாபாரம் செய்பவன் என்ற காரணத்தால், கணவனுடன் வாழப்பிடிக் காமல் பிறந்தகத்திலேயே இருப்பதோடல்லாமல் நாடகக்குழு நிர்வாகி ஒருவனுடன் உல்லாசமாகப் பொழுதைப் போக்கி வருகிறாள்.

அவ் வீட்டுக்கு வந்திருக்கும் போலிச் சாமியாரையும் அவரது சீடர்களையும் மகா சக்தி வாய்ந்தவர்களாக எண்ணி, அவர்கள் நடத்தும் அன்றாட பூஜையில் பக்தி காட்டி வருகிறாள் மாசிலா மணியின் மனைவி அலமேலு.

கணவனால் வெறுக்கப்பட்ட அமுதா, தனது பிறந்தகத்தில், சிறுவர் சிறுமியர்களுக்குக்கல்வி கற்பிப்பதில் பொழுதைப்போக்கி வருகிறாள். அமுதாவின் தாய் சிவகாமி, தன் மகள் வாழாவெட் டியாக இருப்பதைக் குறித்து அவ்வூர்ப் பெண்கள் இழிவாகப் பேசியதைக் கேட்கச் சகியாமல், மாப்பிள்ளையிடம் நேரில் வந்து அமுதாவுக்கு வாழ்வுதரும்படி மன்றாடிக்கேட்கிறாள். அமுதாவை

ஏற்றுக்கொள்ள மறுத்த ராமு, அவளை விவாக ரத்து செய்து விடப் போவதாகக் கண்டித்துச் சொல்லிவிடுகிருன்.மனமுடைந்த சிவகாமி, வீடு வந்து மரணப் படுக்கையிலிருந்துகொண்டு அமுதாவிடம் நடந்த விவகாரங்களைக் கூறி, எவ்விதத்திலும் கணவனுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிருள். அவ்விதமே தாயின் வாக்கைக் காப்பதாக உறுதிமொழி செய்கிருள் அமுதா.

பொழுதையும் பொருளையும் சீட்டாட்டத்தில் கழித்த மாசிலாமணி முதலியார் திருந்திஞரா ?

ராமு தன் மனைவி அமுதாவுக்கு மீண்டும் வாழ்வளித்தாஞ ?

விலை மாதரையும், மதுவையும் விடாப் பிடியாகக்கொண்டிருந்த சோமுவின் வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்டதா ?

கொண்ட கணவனேடு வாழாமல் பிறந்தகத்திலேயே இருந்துகொண்டு அப்பாவுவை அலட்சியம் செய்த காமு, வாழ்வின் உண்மையைப் புரிந்து திருந்திஞளா ?

போலிச் சாமியாரையும் சீடர்களையும் நம்பிய அலமேலுவுக்கு அவர்களைப் புரிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்ததா ?

அமுதா தன் தாய்க்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றிஞளா ?

இவைகளின் விடைகளை வெண்திரையில் காண்க !

இப்படத்தின் பாடல்களை "கொலம்பியா" எச். எம். வி. இசைத்தட்டுகளில் கேளுங்கள்.

அன்பு எங்கே? பாடல்கள்.

1

இயற்றியவர் : பாடியவர் :
தஞ்சை இராமையாதாஸ் **ஜமுனாராணி**

(கிளப் டான்ஸ்)

மாலா . மேலே பறக்கும் ராக்கெட்டு
மின்னல் பூச்சி ஜாக்கெட்டு
ஆளை மயக்கும் FACE கட்டு
அதுதான் இப்போ மார்க்கட்டு
மாமா...மாமா...மஸா !
மாமா...மாமா...மஸா !
மாமா...மாமா...மஸா !
மைனர் தம்பி மனசைப் பறிக்கும்
புல் புல் மைனா
மந்திர தந்திர வேலைக்கெல்லாம்
மசியாது நைனா
மாதக் கணக்கு காதல் ஜுரத்தை
தணித்திடுமே கொயினா
மாத்திரை எந்தன் கண்ணிலிருக்கு
பாத்துக்கோ நைனா—கொயினா
மாத்திரை எந்தன் கண்ணிலிருக்கு
பாத்துக்கோ நைனா...
மாமா...மாமா...மஸா !
மாமா...மாமா...மஸா !
மாமா...மாமா...மஸா !
அன்ன நடையில் ஆயிரம் மைனர்
அசந்தே விடுவாங்க
மின்னல் இடையைக்கண்டாலே
மெய் மறந்தே விடுவாங்க
பின்னல் ஜடையின் பின்னால் வந்து
பேட்டிக்கு நிப்பாங்க
பெரிய பெரிய மகாராஜனும்
போட்டிக்கு வருவாங்க... [மேலே பறக்கும்...

2

இயற்றியவர் : பாடியவர்கள் :
தஞ்சை இராமையாதாஸ் டி. எம். சௌந்திரராஜன், பி. லீலா

தாசி : அமிர்த யோகம் வெள்ளிக்கிழமை கண்ணாளா
அதுக்குத்தானே காத்திருந்தேன் இன்னாளா
சோமு : அழகு சிலையே அமுத கலையே உன்னாலே
மெழுகு போலே உருகி நின்றேன் தன்னாலே

தாசி : உலகினிலே ஒரு புதுமை—இது
உனக்கென பிறந்திட்ட பதுமை
பழகி விட்டால் இதன் மகிமை—வயிர்
பசியும் எடுக்காத இளமை இனி
பழகி விட்டால் இதன் மகிமை—வயிர்
பசியும் எடுக்காத இளமை
இன்பம் தரும்—கண்ணாளா
அதுக்குத் தானே காத்திருந்தேன் இன்னாளா

சோமு : அழகு சிலையே அமுத கலையே உன்னாலே
மெழுகு போலே உருகி நின்றேன் தன்னாலே
நீ கனிந்த காதலின் விருந்து—அது
கவலை தீர்த்திடும் மருந்து—ஒன்று
கலந்து கொஞ்ச காலம் இருந்து—மெய்க்
காதல் வாழ்விலே இணைந்து
இன்பம் பெற உன்னாலே
மெழுகு போலே உருகி நின்றேன் தன்னாலே

தாசி : அமிர்தயோகம் வெள்ளிக்கிழமை கண்ணாளா
அதுக்குத்தானே காத்திருந்தேன் இன்னாளா
நிகரிலா பருவ தாகம்—தணிய
நீந்துவோம் இன்ப லோகம்

சோமு : இனி இணையில்லாத சுகயோகம்
இதுதானே வாழ்வின் அனுராகம்
இன்பம்தரும்—உன்னாலே
மெழுகுபோலே உருகி நின்றேன் தன்னாலே

தாசி : அமிர்தயோகம் வெள்ளிக்கிழமை கண்ணாளா
அதுக்குந்தானே காத்திருந்தேன் இன்னாளா !

3

இயற்றியவர் : **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**
பாடியவர்கள் : **ஜமுனாராணி&குழுவினர்**

அமுதா : ஆனா ஆவன்னா ஈனா ஈயன்னா
ஊனா ஊவன்னா ஏனா ஏயன்னா

மாணவர்கள்: ஆனா ஆவன்னா ஈனா ஈயன்னா
ஊனா ஊவன்னா ஏனா ஏயன்னா

அமுதா: ஆனா ஆவன்னா அறிவை வளர்த்தவன்
பேரென்ன?—சொல்லு!

மாணவர்கள்: வள்ளுவன் !

அமுதா: ஈனா ஈயன்னா எதையும் வெல்லும்
பொருளென்ன?...

மாணவர்கள்: அன்பு!...

அமுதா: ஊஞ ஊவன்ஞ உலக உத்தமன்
பேரென்ன...சொல்லு!

மாணவர்கள்: காந்தி தாத்தா !...

அமுதா: ஏஞ ஏயன்ஞ எழுத்தறிவித்தவன்
இறைவனுகும்

மாணவர்கள்: ஆஞ ஆவன்ஞ...

அமுதா: அன்பாய்ப்பழகும் கொம்பை அசைக்கும்
அம்மாண்ணு கத்தும் அது என்ன?...

மாணவர்கள்: மாடு!...

அமுதா: சொன்னதைச் சொல்லும் கனிகளைத் தின்னும்
சோலையில் வாழும் அது என்ன?

மாணவர்கள்: கிளி!...

அமுதா: கருப்பாய் இருக்கும் குரல்தான் இனிக்கும்
பறக்கும் பறவை அது என்ன?

சிறுவன்: காக்கா !...

சிறுமி: இல்லை, குயில்!...

மாணவர்கள்: ஆஞ ஆவன்ஞ...

அமுதா: அன்பும் அறமும் அடக்கமும் பொறுமையும்
பண்பும் கொண்டவர் பெண்கள்

மாணவர்கள்: அன்பும் அறமும் அடக்கமும் பொறுமையும்
பண்பும் கொண்டவர் பெண்கள் !

அமுதா: ஆளும் திறமையும் வீரமும் கடமையும்
பெருமையும் கொண்டவர் ஆண்கள் !

மாணவர்கள்: ஆளும் திறமையும் வீரமும் கடமையும்
பெருமையும் கொண்டவர் ஆண்கள்!
[ஆஞ ஆவன்ஞ...

4

இயற்றியவர் :
தஞ்சை இராமையாதாஸ்

பாடியவர் :
ஜமுனாராணி

மாலா : காதல் என்றால் என்ன ?—அதில்
காணும் இன்பம் என்ன ?...
கண்ணோடு கண் கலந்து
காயும் ருசியாய்க் கனிந்து

என்னென்னமோ பண்ணுது கண்ணா—மனசை
என்னென்னமோ பண்ணுது கண்ணா !...

[காதல் என்றால் என்ன...]

கனவிலும் நீயே நினைவிலும் நீயே
காண்பதினாலே கனிந்ததுன்னாலே !
காதலின் வேகம் செய்யுமோ இப்படி
கன்னி சகிப்பது எப்படி ?
காதலின் வேகம் செய்யுமோ இப்படி
கன்னி சகிப்பது எப்படி ?

என்னென்னமோ பண்ணுது கண்ணு—ஹா்ம்!
என்னென்னமோ பண்ணுது கண்ணு !

[காதல் என்றால் என்ன...]

தூணிலும் நீயே துரும்பிலும் நீயே
தோன்றுவதேனோ மாயை இதானோ
தூக்கமில்லாம ஏங்குது மனசு
சொன்னு கேக்குதா வயசு
தூக்க மில்லாம ஏங்குது மனசு
சொன்னு கேக்குதா வயசு

என்னென்னமோ பண்ணுது கண்ணு—ஹா்க்கும்
என்னென்னமோ பண்ணுது கண்ணு !...

[காதல் என்றால் என்ன...]

5

இயற்றியவர் :
விந்தன்

பாடியவர் :
பாலசரஸ்வதி

பல்லவி

அமுதா : சொல்லு நீ ராஜா சொல்லு நீ ராஜா!...
சொல்லு நீ ராஜா சொல்லு நீ ராஜா!...
சோதனை ஏனோ சொல்லு நீ ராஜா !...
சொல்லு நீ ராஜா சொல்லு நீ ராஜா!...

அனுபல்லவி

இலவு காத்த கிளியைப்போல
எனது கதையும் ஆவதா ?
குலவி மகிழ நினைத்த தெல்லாம்
குலைந்து கொள்ளை போவதா ?

[சொல்லு நீ ராஜா ?...

சரணம்

வாழ்வில் இன்பம் காண வசந்தம்
வந்ததும் கதவை அடைப்பதா ?...
தென்றல் தீண்ட முல்லை சிரிக்க
தேய்ந்த நிலவாய்ப் போவதா ?
சொல்லு நீ ராஜா...சொல்லு நீ ராஜா!
சோதனை ஏனோ சொல்லு நீ ராஜா !
என் ஆசை ராஜா சொல்லு நீ ராஜா !...

6

இயற்றியவர் :
கண்ணதாசன்

பாடியவர் :
சுசீலா

தொகையரா

பார்வதி : எத்தனை கோடி பணமிருந்தாலும்
நிம்மதி வேண்டும் வீட்டிலே !...
நிம்மதி வேண்டும் வீட்டிலே !...
[எத்தனை கோடி...]

பல்லவி

உத்தம மான மனிதர்களைத்தான்
உலகம் புகழுது ஏட்டிலே—இந்த
உலகம் புகழுது ஏட்டிலே

அனு பல்லவி

அர்த்த ராத்திரி பனிரண்டு மணிக்கு
ஆடிக்கொண்டே நுழைவதை
அகப்பட்ட தெல்லாம் தூக்கி எறிந்து
ஆர்ப்பாட்டங்கள் செய்வதை
அடுத்த நாளில் நினைத்துப் பார்த்தால்
வெட்கம் வருவது இல்லையா ?...
சின்னையா நீ சொல்லையா ?...
[எத்தனை கோடி...]

சரணம்

அன்னமிட்டு தாலாட்டி
ஆசையோடு வளர்த்தாள்—அந்த
அன்னையரின் எண்ணம் தன்னைக்
காவினிலே வளர்த்தே
முன்னவர் போல் பெயரெடுத்து
முறையோடும் வாழும்
முடிவு கொள்வீர் வாழ்வினில் நாளும்
துணைபுரிவேன் நானும்—தினம்
துணைபுரிவேன் நானும்
[எத்தனை கோடி...

7

இயற்றியவர் :
தஞ்சை இராமையாதாஸ்

பாடியவர் :
(ராதா) ஜெயலட்சுமி

தொகையரா

தாசி : என் வேல் விழியைக்கண்டு மான் விழியைப்
படைத்தான்—பிர்மா...
என் தேன் இதழைக்கண்டு ரதியின் சிலையை
செதுக்கினான்—விஸ்வகர்மா...
என் சிவந்த மேனியைக் கண்டு தேவியின்
ஓவியமே தீட்டினான்—ரவிவர்மா...

பல்லவி

காயா பழமா சொல்லு ராஜா!...நீ
காயா பழமா சொல்லு ராஜா—மெய்க்
காதலும் மிஞ்சுதே கண்களும் கெஞ்சுதே
[காயா பழமா...

அனுபல்லவி

மாயாவலையென மயங்காதே—தேன்
மதுவே தருவேன் தயங்காதே!
ஓயா கவலையில் மூழ்காதே—இது
ஒன்றே போதும் மனம் தளராதே
[காயா பழமா...

சரணம்

தேவரின் அடியார்கள் நாங்களன்றோ—எம்மை
தரிசிக்கும் பக்தர்கள் நீங்களன்றோ!...
யாவுமே உலகத்தில் வேஷமன்றோ—சொந்தம்
யாவுமே உலகத்தில் வேஷமன்றோ!
எழில் மேவும் கிளி நானே இன்பமே தாராய்
[காயா பழமா...

8

இயற்றியவர் : தஞ்சை இராமையாதாஸ்

பாடியவர்கள் : ஏ. எம். ராஜா, ஜமுனாராணி

பல்லவி

மாலா: பூவில் வண்டு போதை கொண்டு
தாவும் நிலை தானேன் ஐயா!
பார்வை ரெண்டும் பாசங்கொண்டு
காவல் மீறும் காலம் ஐயா!
[பூவில்

அழகான சிலையோடு பழகாமலே
அனுராக சுகமேதும் புரியாமலே
ராமு: இதுதானே என் வாழ்வில் முதல் பாடமே
இனிமேலே மலரோடு உறவாடுமே!
மாலா: பூவில் வண்டு.........(பல்லவி)
ராமு: இமையாத விழி கூட கவி பாடுமா?
சுவையான இதழ்கூட ஜதி போடுமா?
மாலா: எழில் மேவும் இளம் மாதர் குணம் மாறுமா?
இனியேனும் புரியாத நிலையாகுமா?
ராமு: பூவில் வண்டு.........(பல்லவி)
மாலா: இசைபாடும் குயிலேனோ விரைந்தோடுது
ராமு: உன் இசையாலே தான் வெட்கிப் பறந்தோடுது!
மாலா: அசைந்தாடும் மயிலேனோ நிலை மாறுது
ராமு: உன் அழகான உடல் கண்டு அதும் நாணுது?
மாலா: பூவில் வண்டு.........(பல்லவி)

இயற்றியவர் :
சீதாராமன்

பாடியவர் :
டி. எம். சௌந்திரராஜன்

பல்லவி

டிங்கிரி டிங்காலே மீனுச்சி
டிங்கிரி டிங்காலே
உலகம்போற போக்கைப் பாரு
தங்கமே தில்லாலே

அனுபல்லவி

அதிகமாகப் படிச்சுப் படிச்சு மூளை கலங்கிப்போச்சு
அணுகுண்டைத்தான் போட்டுகிட்டு அழிஞ்சு போகலாச்சு
அறிவில்லாம படைச்சுப் புட்டான் மிருகமுன்னு
சொன்னோம்—அந்த
மிருகமெல்லாம் நம்மைப் பார்த்து சிரிக்குதென்ன
—செய்வோம்
[உலகம் போற போக்கை...]

ஐயா வரவை பார்த்து வீட்டில் ஏங்குறுங்க அம்மா—அந்த
ஐயா இங்கே கும்மாளந்தான் போடுருரு சும்மா
அப்பன் பாட்டன் ஆஸ்தியெல்லாம் சிகரெட்டாக—மாறி
ஐயா வாயில் புகையுதுபார் "ஐயாம் வெரிசாரி"!...
[உலகம் போற போக்கை...]

கரியும் கூட்டும் சோறும் தின்னமாட்டார் இந்த...மைனர்
காஞ்சுபோன ரொட்டித் துண்டும் சூப்பும் இவரு...டின்னர்
குறுக்கு வழியில் பணத்தை சேர்க்க இந்த மனுஷன்—ஆசை
குதிரை வாலில் கொண்டுபோயி கட்டிடுவார் காசை
[உலகம் போற போக்கை...]

கண்ணும் கண்ணும் பேசிக்குது
மூக்கும் மூக்கும் முட்டுது
பெண்ணும் ஆணும் ஜோடி போட்டு
கையைக் காலை ஆட்டுது—இதைக்
கண்டவங்க மண்டையெல்லாம்
தாளத்தோட ஆடுது
காலு கையி உடம்பை யெல்லாம்
தூக்கித் தூக்கிப் போடுது!
[உலகம் போற போக்கை...]

முல்லை அச்சகம், ஆயிரம் விளக்கு, சென்னை-6.

ஜூபிலி பிலிம்ஸ்
கல்கியின்
பார்த்திபன் கனவு
எமது அடுத்த திரைக் காவியம்